2001 செப்டம்பர் 14]

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூரிலிருந்து, கோயம்புத்தூர், மேட்டுப்பாளையம், ஈரோடு பகுதிகளுக்குப் போதுமான பஸ்கள் இல்லை. அதுவும் இரவு நேரத்தில் 10 மணிக்கு மேலே அங்கே பஸ்கள் ஓடுவதில்லை. போதுமான பஸ்கள் இல்லாத காரணத்தால், தனியார் மேக்சி வேன் சொந்தக்காரர்கள் குன்னூரிலிருந்து மேட்டுப்பாளையம் செல்வதற்கு நூறு ரூபாயும், கோயம்புத்தூர் செல்வதற்கு 150 ரூபாயும் வசூல் செய்கிறார்கள். எனவே, அரசுக்கு நிதிப் பற்றாக்குறை இருந்தால், மினி பஸ்களை விடுவதற்குக் கூடுதலாக பர்மிட் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதுபோல, மேக்சி கேப் தமிழ்நாடு முழுவதும் இன்றையதினம் டிக்கெட் போட்டு அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை கோயம்புத்தூர் மாவட்டத்தில் எடுக்கப்பட்டு வருகிறது. வால்பாறை பகுதியிலேகூட, மேக்சி கேப் அதிகமாக அடிப்பதாக மாண்புமிகு கோவை தங்கம் அவர்கள் அன்றைக்கே அவையிலே குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக, நடவடிக்கை எடுத்ததன் பேரில், வால்பாறை கிளையில் மட்டும் நாள் ஒன்றுக்கு இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் இன்றையதினம் வசூல் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட இரவு நேரப் பேருந்துகளுக்கு வசதி செய்ய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

94—

கூடுதல் பேருந்து

***3072—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதியில் போதுமான பேருந்து வசதிகள் இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மற்றும் காஞ்சிபுரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் செய்யாறிலிருந்தும், செய்யாறு வழியாகவும் போதுமான பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.எஸ். உலகரட்சகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான பேருந்துகள் இல்லாத காரணத்தால், ஒவ்வொரு ஊருக்கும் இரண்டு, மூன்று சிங்கிள்கள் வரவேண்டிய பேருந்துகள் அனைத்தும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது செய்யாறு தொகுதி.

திரு. பி.எஸ். உலகரட்சகன்: ஒன்று, இரண்டு சிங்கிள்கள் வந்து சேருகிற காரணத்தால், காலையில் பள்ளிக்கூடம், கல்லூரிக்கு வரும் மாணவ, மாணவியர்கள் மாலையில் வீடு சேருவதற்கு இயலாததாகிவிடுகிறது. மருத்துவத்திற்கு, மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்கும் அதே நிலைமை இருக்கிறது. மேலும், அதிகமான பேருந்துகள் அடிக்கடி பழுது அடைகின்ற காரணத்தால், சில ஊர்களுக்கு பேருந்தே வருவதில்லை என்ற குறையிருக்கிறது. கடந்த மே மாதம் 22 ஆம் தேதி அரசுப் பேருந்து பழுதாகிவிட்ட காரணத்தால், தனியார் பேருந்தில் மொத்தம் 200 பயணிகள் வந்துள்ளார்கள். பேருந்து உள்ளே 110 பேரும், பேருந்தின் மேலே 90 பயணிகளுடன் வந்த பேருந்து கீழே சாய்ந்துவிட்ட காரணத்தால், அந்த இடத்திலே 3 பேர் பலியாகியிருக்கிறார்கள். இதற்குக் காரணம், இதற்கு முன்பே வரவேண்டிய அரசு பஸ் வராத காரணத்தால், அந்தப் பயணிகளும், இந்த தனியார் பேருந்துக்காக காத்திருந்த பயணிகளும் ஒரே பேருந்தில் வந்ததால் இந்த விபத்து நடந்தது என்று அங்கு உள்ளவர்கள் கூறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

2001 செப்டம்பர் 14]

திரு. பி.எஸ். உலகரட்சகன்: இந்த நிலை மாறுவதற்கு அதிகமான பேருந்துகள் விடப்படுமா? மேலும் இறந்தவர்கள் குடும்பத்திற்கு அரசு உதவித் தொகை ஏதாவது வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேருந்துபற்றி மட்டும் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாறு பணிமனையிலேயிருந்து புறநகர்ப் பேருந்துகள் பத்தும், நகரப் பேருந்துகள் பதிமூன்றும் ஆக 23 தடப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் கிருஷ்ணா நகர், பிராட்வே, செங்கம், போளூர், ஆரணி, திருவண்ணாமலை பணிமனைகளிலேயிருந்தும் 37 பேருந்துகள் செய்யாறு வழியாக இயக்கப்படுகின்றன.

காஞ்சிபுரம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம்-3, பேருந்துகள் மூலமும் போதிய அளவிற்குப் பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, நடப்பாண்டில் செய்யாறு தொகுதியில் மேற்கொண்டு கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, பள்ளிக்கூட மாணவ, மாணவியர்கள் செல்வதற்கு வசதியாக அவர்களுக்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம்.

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது செய்யாறு தொகுதி பற்றியது.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 7, திருமதி எஸ். மகேஸ்வரி, மாண்புமிகு மின் துறை அமைச்சர்.